செ.வெ.எண்:395 நாள்: 27.06.2019

**புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நெல் கொள்முதல் செய்ய, நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நெல் கொள்முதல் செய்ய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் காரீப் கொள்முதல் பருவம் 2018-2019 முன்னிட்டு நெல் அறுவடை தொடங்கியுள்ளதால், விவசாயிகள் அதிகபட்ச அளவில் பயனுறும் வகையிலும், விலை வீழ்ச்சியின் பாதிப்பிலிருந்து காக்கும் வகையிலும், விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய ஏதுவாக புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கனவே 18 நேரடி நெல்கொள் முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ள நிலையில், தற்போது பொன்னமராவதி தாலுகாவில் உள்ள சடையம்பட்டி கிராமத்தில் 29.06.2019 முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லினை தங்கள் கிராமங்களுக்கு அருகில் உள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**